**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 384/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 02.02.2026.**

| **Name : நித்யா** | **Taluk :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனை குடிமை மருத்துவராக உள்ளேன். கடந்த 31.03.2021ம் தேதியன்று இரவு 10.50 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.பன்னீர்செல்வம் வயது 33, த/பெ வெங்கடாசலம் என்பவரை அவருடைய அம்மா சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 31.03.2021 –ம் தேதி மாலை 6 மணியளவில் அவர் வீட்டில் வைத்து 6 தெரிந்த நபர்கள் (4 ஆண், 2 பெண்) தன்னை இரும்பு தடியாலும், சுத்தியாலும் கை, தோள்பட்டையில் அடித்ததாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வீக்க காயம் இடது தோள்பட்டையில் 10x5 cm கன்றிய காயம் இருந்தது, அது சிவந்த நிலையில் காணப்பட்டது. 2) கன்றிய காயம் முதுகில் 7x3 cm அளவிலும், 3) வலது தோள்பட்டையில் கன்றிய காயம் 5x3 cm அளவில் இருந்தது, 4) சிவந்த காயம் வலது மேல் கையில் 3x3 cm அளவில் இருந்தது. மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் 25 நாட்கள் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 1வது காயம் கொடுங்காயம் என்றும் மற்ற காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. போலீஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ.3 மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4** அவருக்கு இடது கை மேல் எலும்பில் அறுவை சிகிச்சை பிளேட் பொருத்தி செய்யப்பட்டது. என் பரிந்துரையின் பேரில் காயம்பட்ட பன்னீர்செல்வம் என்பவருக்கு எலும்பு மருத்துவ நிபுணர் விமலகண்ணன் என்பவர் அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அவர் வழங்கிய கருத்துரையின் பேரில் நான் கொடுங்காயம் என கருத்துரை வழங்கினேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

4) கருத்துரையில் எந்த காயம் கொடுங்காயம் என குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். விமலகண்ணன் மருத்துவர் அளித்த சிகிச்சையை மேற்கொண்டு தான் நான் கருத்துரை வழங்கினேன் என்றால் ஆமாம். காயம்பட்ட பன்னீர்செல்வம் என்பவருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே பதிவை நான் பார்த்தேனா என்றால் இல்லை.

5) எதன் அடிப்படையில் கொடுங்காயம் என கொடுத்தேன் என்றால் அவருக்கு சிகிச்சை அளித்த எலும்பு நிபுணர் விமலகண்ணன் என்பவரின் சான்றிற்கு ஏற்ப வழங்கினேன். நான் கொடுத்த கருத்துரையில் மருத்துவர் விமலகண்ணன் என்பவர் பரிந்துரை பேரில் நான் சான்று வழங்கியதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**